[2008 ஏப்ரல் 11

முற்பகல் 10-00

அதேநேரத்தில், அங்கே 12 பிற்படுத்தப்பட்ட மாணவிகள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, 1,400 பேர் படிக்கின்ற அந்தப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவிகள் வெகு தொலைவிலிருந்து வருகின்ற நிலையில், மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் அந்தப் பள்ளிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக, அந்தப் பள்ளி அரசுப் பள்ளியாக இருந்தாலும் சுமார் 85 விழுக்காட்டுக்கு மேல் அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவிகள் தேர்ச்சி பெறுகின்றார்கள். எனவே, அந்த மாணவிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாணவிகளுக்கான ஒரு விடுதியைத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னதைப்போல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியிலே, உண்மையான தேவையை என்னிடத்திலே சொல்லி இதுபோன்ற விடுதிகளைக் கேட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு எந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

அர்ச்சகர் பயிற்சி நிலையம்

***29455—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 ஏப்ரல் 11]

(அ) தருமபுரியில் அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே சென்னை, திருவரங்கம், திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மட்டும் அர்ச்சகர் பயிற்சி மையங்கள் நடந்து வருகின்றன. தற்போது கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்றியுள்ள இந்த நேரத்தில், தருமபுரியில் இந்தப் பயிற்சி மையத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதியும் உள்ள அனைத்து சாதியினரும், திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற தமிழக அரசின் ஆணைக்கிணங்க, நீதியரசர் ஏ.கே. இராஜன் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு பரிந்துரை செய்த இடங்களில், தற்போது முதல் கட்டமாக—இதுவரை இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் என்பது தமிழகத்தில் இல்லாத ஒன்று—புதிதாக இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டு, முதல்கட்டமாக 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற 6 இடங்களில், 2 இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையமும், 4 இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையமும் நிறுவப்பட்டிருக்கின்றன. போதுமான மாணவர்கள் இதில் சேர்ந்து பயின்று வருகின்றார்கள். தேவைக்கேற்ப விரிவுபடுத்துகின்ற நேரத்தில் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே தெருக்கூத்துக் கலைஞர்கள், இசைக் கலைஞர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, கிராமப்புறங்களில் ஊதியமில்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கின்றதா, வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கிறது கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருநெல்வேலி தொகுதி, சைவம் மற்றும் தமிழ் வளர்த்த பகுதியாகும். அங்கே அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி என்பது முதன்முதலாக தமிழகத்தில் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பள்ளிகளுக்கு எந்த அளவிற்கு மாணவர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும் என்பது இப்போதுதான் தெரியவந்திருக்கிறது. 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் 207 மாணவர்கள், இப்போது இட ஒதுக்கீட்டு அடிப்படையிலே சேர்ந்து பயின்று வருகிறார்கள். ஆகவே, இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயில்வதற்கு மாணவர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. தேவைக்கேற்ப இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி யோசிக்கலாம். அப்படி யோசிக்கின்ற கட்டத்தில் திருநெல்வேலியும், அதேபோல மற்ற பகுதிகளும் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

2008 ஏப்ரல் 11]

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் தமிழிலேயே பெண்கள் அர்ச்சனை செய்யும் ஒரே இடம் மருவத்தூர் ஆலயமாகும். அதேபோல, எல்லா ஆலயங்களிலும் தமிழில் பெண்களும், ஆண்களும் அர்ச்சனை செய்ய அரசு சட்டம் நிறைவேற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களில் முறையாகப் பயிற்சி பெற்ற அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இப்பொழுது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

96—

தரம் உயர்த்துதல்

***5436—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி மதுரை முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.